## வடக்கு மாகாண பொதுச் சேவையின் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வகுப்பு III தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2015.

வடக்கு மாகாண பொதுச் சேவையில் வெற்றிடமாகவுள்ள விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வகுப்பு III தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **30.10.2015** ஆகும்.

**02. ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்:**

1. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமாகும்.

2. நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

**03. தகைமைகள் :**

**03.1. பொதுவான தகுதிகள்**

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இ. i. விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தரவதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

அல்லது

ii. விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

**04. ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துப் பரீட்சையில் திறமை அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கும், ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைவாகவும், தேசிய மற்றும் மாகாண கொள்கைகளுக்கும் அமையவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகப் பரீட்சையில் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். எழுத்துப் பரீட்சை நடாத்துதல் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை எழுதுவதற்கான அனுமதி வழங்கப்படும். நியமனத்திற்கான தெரிவின் போது நிரந்தர வதிவிடம் கவனத்திற்கொள்ளப்படும்.

**குறிப்பு 1:**

இவ்விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன் கோரப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**05. பரீட்சைக் கட்டணம்:**

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா **500/-**ஐச் செலுத்தி **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்** அவர்களின் **3003** என்ற வைப்பு கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது

**06. விண்ணப்பிக்கும் முறை :**

06.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் முதலாவது பக்கத்தில் 1 தொடக்கம் 11.3 வரையான பந்திகளும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **30.10.2015** ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வகுப்பு III தரம் III” எனப் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.**

06.2. **முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்**. ஒரு பதவிக்காக விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பம் வேறு ஒரு பதவிக்காக மாற்றம் செய்யப்படமாட்டாது. இது தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

06.3. விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

06.4. விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், பின்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும்.(தொலைபேசி/தொலைநகல் இலக்கம் 021 221 9981).

- கோரிக்கைக் கடிதம், பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி, விண்ணப்பப் படிவத்தின் பிரதி, விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

**07.** பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:-

| **நகரம்** | **நகர எண்** |
|---|---|
| யாழ்ப்பாணம் | 01 |
| வவுனியா | 02 |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

**08.1.சம்பள அளவுத்திட்டம்.**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006(A)க்கு அமைய, ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வகுப்பு III தரம் III அலுவலருக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 14,425 -145 x 10 – 170 x 11- 240x 6 -320 x 14 - 23,665 ( MT–1- 2006 –A ) இன் ஆரம்ப படிநிலை இல் அமர்த்தப்படுவர்.

**08.2. வயதெல்லை:**

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**08.3. கல்வித்தகைமை :**

08.3.1. கல்வி பொதுத் தராதர(சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் தமிழ் / சிங்களம் /ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களுடன் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

08.3.2. கல்வி பொதுத் தராதர(உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்..

08.3.3. **தொழில்நுட்ப தகைமை (விளையாட்டு)**

மாகாண விளையாட்டுத்துறை அமைச்சினால் மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட மாகாண விளையாட்டு விழாவில் 1ஆம் அல்லது 2ஆம் இடத்தைப் பெற்றிருத்தல்

அல்லது

தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட தேசிய விளையாட்டு விழாவில் 1ஆம்,2ஆம் அல்லது 3ஆம் இடத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட திறந்த விளையாட்டுப் போட்டியில் 1ஆம்,2ஆம் அல்லது 3ஆம் இடத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாவில் 1ஆம் அல்லது 2ஆம் இடத்தைப் பெற்றிருத்தல்.

மேற்படி விளையாட்டுக்கான சான்றிதழ்கள் யாவும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகளாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1:-** கல்வி பொதுத் தராதர(உ/த) பரீட்சையில் சித்தியடைய வேண்டும் எனும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிப்பை பெறுவதற்கு பின்வரும் ஏதேனும் விளையாட்டுத்துறை ஒன்றில் 1ஆவது, 2ஆவது அல்லது 3 ஆவது பதக்கங்களைப் இலங்கை நாட்டை பிரதிநிதிப்படுத்தி சர்வதேச மட்டத்தில் பெற்றிருத்தல் வேண்டும். அவையாவன சர்வதேச விளையாட்டுப் போட்டி, உலகக் கிண்ணம், உலக

சம்பியன்ஷிப், ஒலிம்பிக் போட்டி, பொதுநலவாய விளையாட்டுகள்,ஆசிய நாட்டுப் போட்டி மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டி.

08.3.4. **உடற் தகுதி**

1. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிறந்த உடற் தகுதியினையும் நற்பண்புகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
2. உடற் தகுதியினை உறுதிப்படுத்துவதற்காக எதிர்செயற்பாட்டு வேகம்(Reaction),நெகிழ்ச்சித் தன்மை(Flexibility), வயிற்றின் வலு(Sit up), இருகைகளின் வலு(Push Up), நின்றபடி தூரம் பாய்தல்(Standing Jump), வேகம்(Speed) மற்றும் தாங்கும் திறன்(Endurance) போன்றன விளையாட்டுத்துறை திணைக்களத்தினால் செயன்முறையாகப் பரீட்சிக்கப்படும்.

## 08.4. தேர்வுக்கான பரீட்சை

08.4.1. எழுத்துப்பரீட்சை:

இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களில் நடாத்தப்படும். இவ்வெழுத்துப்பரீட்சை கீழ் குறிப்பிடப்பட்ட இரு வினாப்பத்திரங்களை உடையதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு.

| வினா பத்திரம் | பாடத்திட்டம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. பொது அறிவு | விளையாட்டு,கலாசாரம், கல்வி, விஞ்ஞானம், அரசியல், பொருளியல் தொடர்பான அறிவு, மற்றும் சமூக, தேசிய, பிராந்திய மற்றும் உலக சுற்றுச்சூழல் பற்றிய அறிவு ஆகியவற்றைப் பரிசோதிக்கும் வினாக்களைக் உள்ளடக்கியிருக்கும். | $1^1/_2$ மணித்தியாலம் | 100 | 40% |
| 02. உளச்சார்பு | பரீட்சார்த்தியின் திறன் மற்றும் தர்க்க ரீதியாக முடிவெடுக்கும் நுண்ணறிவை அளவிடுதல் தொடர்பான அறிவைப் பரிசோதிக்கும் வினாக்களை உள்ளடக்கி இருக்கும் | 01 மணித்தியாலம் | 100 | 40% |

## 08.5. செயன்முறைப் பரீட்சை

| பரீட்சை | பாடவிதானம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| I.பொதுவான விடயங்கள் | விளம்பரத்தின் பந்தி 08.3.4. இல் 2 இற் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | **100** | **60%** |
| II.தெரிவு செய்யப்படும் விளையாட்டுகள் தொடர்பானது | ஒவ்வொரு விளையாட்டு தொடர்பான செயற்பாடுகள் | **100** | **40%** |

## 08.6. நேர்முகப்பரீட்சை

நேர்முகப் பரீட்சையின் போது கீழ்வரும் அட்டவணைக்கமைவாக புள்ளிகள் வழங்கப்படும். மேலும் இவ் விடயம் தொடர்பாக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக்குறிப்பின் பின்னிணைப்பு 01 இன் மீது கவனம் செலுத்தப்படும்.

| | புள்ளிகள் வழங்கப்படுவதற்கான பிரதான விடயப் பரப்பு | புள்ளியிடும் முறை | | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித்தகைமை | டிப்ளோமா கல்வி | 05 | 10 |
| | | சாதாரண பட்டம் | 07 | |
| | | விளையாட்டுத்துறையில் பட்டம் | 10 | |
| 02 | விளையாட்டுச் செயற்பாடு | பத்திரிகை விளம்பரத்தின் பந்தி 08.3.3 இல் குறிப்பிடப்பட்டதற்கமைவாக பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள் தொடர்பாக சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிட்டவாறு புள்ளியிடப்படும் | | 70 |
| 03 | விளையாட்டுக்களைப் பயிற்றுவித்தல், போட்டிகளில் நடுவராக கடமை வகித்தல், போட்டி அமைப்பாளராக செயற்படல் | சர்வதேச போட்டிகள் - 15<br>தேசிய போட்டிகள் - 07<br>சேவைப் பிரமாணக் குறிப்பின் 9.2.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் பயிற்றுவிப்பாளர், நடுவர், அமைப்பாளராக கடமையாற்றியமை தொடர்பான தேசிய, சர்வதேச சங்கத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். | | 15 |
| 04 | ஆளுமை | நேர்முகச் சபையினால் தீர்மானிக்கப்படும் | | 05 |

**குறிப்பு 2:**

திருத்தமற்ற கையெழுத்திற்கும் சொற்பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும் எழுத்துத் தெளிவில்லாத ஒரு பரீட்சார்த்தி தகைமையை இழக்க நேரிடும்.

நியமனத்தின் பொருட்டு தகைமை பெறுவதற்கு எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் 40% புள்ளிகள் பெறுதல் வேண்டும்.

09. விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.
10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன் தமிழ்மொழி, சிங்கள மொழி, உரைகளுக்கிடையிலான ஏதேனும் வேறுபாடு காணப்படின் தமிழ் மொழி உரையே மேலோங்கும்.
11. இப் பரீட்சை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.
12. இந் நியமனங்களை முற்றாக நியமித்தல் அல்லது பகுதியாக நியமித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் தொடர்பான முழு அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.
13. பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பனவற்றிற்கமைய சேவையில் இணைந்து 05 வருடங்களுக்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.
14. இவ்விளம்பரத்தை www.np.gov.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**ரு.வரதலிங்கம்**
**செயலாளர்,**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**
**23.09.2015**

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**வடக்கு மாகாண பொதுச் சேவையின் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வகுப்பு III தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2015**

தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்: [ ] சுட்டெண்: [ ]
(07 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்: தமிழ்: T / சிங்களம்: S [ ]

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: திரு/திருமதி/செல்வி :-
தமிழில் : :- ……………………………………………………………
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):- ……………………………………………………………

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
தமிழில் :- ……………………………………………………………..
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):- ……………………………………………………………

03. தபால் முகவரி:-
தமிழில் :- ………………………………………………………………………………
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):- ……………………………………………………………

04. அடையாள அட்டை இல. | | | | | | | | | | |

05. தொலைபேசி இல. | | | | | | | | | | |

06. பால்:-

| ஆண் M | | பெண் F | |
|---|---|---|---|

(பொருத்தமான கூட்டில் **X** இடவும்)

07. பிறந்த திகதி:
30.10.2015ஆம் திகதியன்று வயது

| வருடம் : | | மாதம் : | | திகதி : | |
|---|---|---|---|---|---|
| வருடங்கள்: | | மாதங்கள்: | | நாட்கள்: | |

08. இனம் : இலங்கைத்தமிழர் [ ] சிங்களவர் [ ]
முஸ்லிம் [ ] (பொருத்தமான கூட்டில் **X** இடவும்)

09. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம் (பந்தி 03.1. இ. இற்கு அமைய) ……………………
(2) பிரதேச செயலாளர் பிரிவு **:-………………….**
(3) வதியும் கால எல்லை:…………………. தொடக்கம் ………………….. வரை

10. கல்வித்தகைமைகள் :

11.1 க.பொ.த.(சா.த)பரீட்சை.

ஆண்டு :……… சுட்டெண்:…………

| பாடம் | | பெறுபேறு | பாடம் | | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 1. | | | 5. | | |
| 2. | | | 6. | | |
| 3. | | | 7. | | |
| 4. | | | 8. | | |

11.2 க.பொ.த.(உ.த) பரீட்சை.

ஆண்டு :……… சுட்டெண்:…………

| பாடம் | | பெறுபேறு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

11.3. தொழில்நுட்ப தகைமைகள்:(விளம்பரத்தின் பந்தி 08.3.3 இற்கமைவாக)
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

11.4. (i) பட்டத்தின் / சான்றிதழின் வகை :- ……………………………………………………………
(ii) பட்டம் / சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :- …………………………………………………
(iii) பல்கலைக்கழகம் / நிறுவனம்:- ………………………………………………………………
(iv) பாடங்கள்:- ……………………………………………………………………………………....

12. நீங்கள் எப்போதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐ (பொருத்தமான கூட்டில் **X** இடவும்)

ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும் ………………………………………………………………...

13. பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள்.

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம்.---------------------------------------------------------------.

(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் .-----------------------------------------------------------------------.

(iii) செலுத்திய பணம் ரூபா :-----------------------------------------------------------------------------------------------.

| |
|---|
| பற்றுச்சீட்டைக் கழராதவாறு இங்கே ஒட்டவும்(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக அமையலாம்) |

14. **விண்ணப்பதாரரின் சான்றிதழ்** :

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் சமர்ப்பித்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னராயின் தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழ செயலாளரால் விதிக்கப்படும் சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

---------------------------------------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-------------------.

15. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்** :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி...............................................என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ............................ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----------------------------------------------------,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்;
முழுப் பெயர்.---------------------------------------------------------------.
பதவி.---------------------------------------------------------------------------.
முகவரி.-------------------------------------------------------------------------.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
திகதி :------------------------------------------------------------------------.